www.prepp.in

Civil Services (Main)
Examination, 2026

KVMS-C-TML

தமிழ் / TAMIL

(கட்டாயத்தாள்) / (Compulsory)

கால அளவு : ***மூன்று*** மணி நேரம் *Time Allowed :* ***Three*** *Hours*	மொத்த மதிப்பெண்கள் : ***300*** *Maximum Marks :* ***300***

வினாத்தாளுக்கான விதிமுறைகள்

வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும் :

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

வினா/வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.

விடைகள் ***தமிழில் (தமிழ் எழுத்தில்)*** மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.

எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி/பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

Question Paper Specific Instructions

Please read each of the following instructions carefully before attempting questions :

All questions are to be attempted.

The number of marks carried by a question / part is indicated against it.

Answers must be written in ***TAMIL (Tamil script)*** *unless otherwise directed in the question.*

Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.

Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

Prepp
Your Personal Exams Guide

Q1. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 600 சொற்களில் கட்டுரை வரைக : *100*

(a) பாரதத்தின் கருத்தாக்கமும் நமது எதிர்காலமும்

(b) எண்ம யுகத்தில் (Digital Era) குடிமக்களின் கடமைகள்

(c) இந்திய விண்வெளி ஆராய்ச்சியும் செவ்வாய் சுற்றுப்பாதை விண்கலத் திட்டமும்

(d) பயன்பாட்டிலுள்ள சுகாதாரச் சேவைகளின் தன்மையும் தரமும்

Q2. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும் சரியாகவும் சுருக்கமாகவும் விடை எழுதுக : *12×5=60*

துயரத்தின் வகையில் அச்சம் எந்த இடத்தைப் பெறுகிறதோ அதே இடத்தை மகிழ்ச்சியின் வகையில் உற்சாகம் பெறுகிறது. துன்பம் அல்லது இழப்பைத் தாங்கும் துணிவு தேவைப்படும் இடங்களில் செயல்பட்டு ஈடுபடுவதற்குரிய ஆவலான மனநிலையே உற்சாகம் எனப் புரிந்து கொள்ளப்படுகிறது. உற்சாகத்திற்கும் துன்பம் அல்லது இழப்பின் அளவைப் பொறுத்துப் பல தனித்தனி வகைகள் உள்ளன. இலக்கியத் திறனாய்வாளர்கள் அவற்றைப் போர் வீரம், தான வீரம், கருணை வீரம் போன்ற வகைகளாகப் பிரித்துள்ளனர். இவற்றுள் மிகவும் பழமையானது, முக்கியமானது போர் வீரமாகும். இதில் காயம், துன்பம் அல்லது மரணம் கூடப் பொருட்படுத்தப் படுவதில்லை. இந்த வகையான வீரம் தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இதில் துணிவும்

முயற்சியும் உச்ச நிலையை அடைகின்றன. ஆனால் வெறும் வலியையோ துன்பத்தையோ தாங்கும் துணிவினால் மட்டும் உற்சாகம் வராது. அதனுடன் மகிழ்ச்சியூட்டும் முயற்சியும் அதற்கான ஆவலும் இணைந்திருக்க வேண்டும். உதாரணமாக, பெரிய கொப்புளம் அல்லது கட்டி ஒன்றை மயக்கம் அளிக்காமல் அகற்றிக் கொள்ளத் தயாராக இருப்பது துணிவாகக் கருதப்படலாம். ஆனால் அது உற்சாகமாகக் கருதப்படாது. அதைப் போலவே, கைகளையோ கால்களையோ அசைக்காமல் அமைதியாக இருந்து கடுமையான தாக்குதலைத் தாங்கத் தயாராக இருப்பது துணிவு எனக் கருதப்படும். மேலும் மிகக் கடுமையான தாக்குதல்களையும் எதிர்கொண்டு அசையாமல் நிலைத்திருப்பது பொறுமை மற்றும் விடாமுயற்சி எனக் கருதப்படும். ஆனால் இத்தகைய துணிவும், பொறுமையும் அவற்றைக் கொண்டவர் தமக்குப் பல துன்பங்களை ஏற்படுத்தும் செயலினை மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும்போது மட்டுமே வருவது உற்சாகம் என அழைக்கப்படும். எனவே உற்சாகம் என்பது வெறுமனே துன்பத்தைத் தாங்கும் செயலற்ற துணிவில் இல்லை; மாறாக மகிழ்ச்சியுடன் மேற்கொள்ளப்படும் முயற்சியிலும் அதற்கான ஆர்வத்திலும் காணப்படுகிறது. துணிவும் விடாமுயற்சியும் உற்சாகத்தின் வழியாக வெளிப்படுகின்றன.

தானம் வழங்குபவர் தமது செல்வத்தைத் தியாகம் செய்யும் துணிவையும் அதனால் ஏற்படும் துன்பங்களையும் சிரமங்களையும் தாங்கும் மன வலிமையைக் கொண்டிருப்பார். ஒருவர் தானம் செய்ததன் காரணமாகத் தமது வாழ்வாதாரத்தில் ஏதாவது குறைபாடு அல்லது சிரமத்தை அனுபவிக்கும் போது மட்டும் அவரது

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

ஈகையும் பெருந்தன்மையும் உண்மையாகப் போற்றப்படுகிறது. அத்தகைய சிரமம் அல்லது இழப்பின் அளவு எவ்வளவு அதிகமோ அந்த அளவுக்கு அவரது தாராள மனப்பான்மையும் அதிகமாகப் போற்றப்படுகிறது. ஆனால் செல்வத்தைத் தியாகம் செய்வதற்கான இந்தத் தைரியமும் முழு மனதுடன் தயார்நிலை மற்றும் மகிழ்ச்சியின் அறிகுறிகளுடன் சேர்ந்தாலன்றி உற்சாகம் வெளிப்படாது.

போருக்கு அப்பாற்பட்டும், உலகில் கடுமையான உடல் வேதனையையும் மரணத்தின் சாத்தியத்தையும் உள்ளடக்கிய பல கடினமான பணிகள் உள்ளன. ஆராய்ச்சிக்காகப் பனியால் மூடப்பட்ட மேகங்களைத் துளைக்கும், கடக்க முடியாத மலைகளில் ஏறுதல், துருவப் பகுதிகளுக்கோ அல்லது சஹாரா பாலைவனத்திற்கோ பயணம் செய்தல், அறியப்படாத அடர்ந்த காடுகளுக்குள் நுழைதல் ஆகியவை வீரத்திற்கும் துணிச்சலுக்கும் எடுத்துக்காட்டுகளாகும். மக்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடும் மகிழ்ச்சியான ஆர்வமும் உற்சாகமான முனைப்பும் உற்சாகத்தின் வெளிப்பாடாகும்.

(a) உற்சாகத்தில் துணிச்சல் பெறும் இடத்தினைத் தெளிவுபடுத்துக. *12*

(b) விடாமுயற்சி என்றால் என்ன ? *12*

(c) உற்சாகம் எவ்வாறு வெற்றியடைகிறது ? *12*

(d) மகிழ்ச்சியான ஆர்வத்திற்கும் உற்சாகத்திற்கும் இடையிலான தொடர்பை எடுத்துக்காட்டுக. *12*

(e) தானம் வழங்குபவர் தமது தானச் செயலில் கருத்தில் கொள்ள வேண்டியவை யாவை ? *12*

Prepp
Your Personal Exams Guide

Q3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை. *60*

நன்கு கேட்பவராக இருப்பது ஒருவர்
பெற்றிருக்கக்கூடிய மிக முக்கியமான மற்றும் வசீகரமான
வாழ்க்கைத் திறன்களில் ஒன்றாகும். ஆயினும் நம்மில்
சிலருக்கே அதை எப்படிச் செய்வது என்று தெரியும். நாம்
அதற்குக் காரணம் அல்ல; அதை நமக்குக் கற்றுக்
கொடுக்காததுதான் காரணமாகும். நம்மில் சிலரே,
சொல்வதைப் போதுமான அளவு கேட்கிறோம். அதனால்
நாம் கேட்பதைவிடப் பேசுவதற்கே பேராசைப் படுகிறோம்;
மற்றவர்களைச் சந்திக்க ஆர்வத்துடன் இருக்கிறோம்;
ஆனால் அவர்கள் சொல்வதைக் கேட்கத் தயக்கத்துடன்
சமூக வாழ்க்கைக்கு வருகிறோம் என்பது தெரிகிறது. நட்பு
என்பது சமூகமயமாக்கப்பட்ட தன்னலமாகச் சீரழிகிறது.
ஒரு சிறந்த கேட்பவரின் நடத்தையிலும்
செயல்பாடுகளிலும் வெளிப்படும் பல நற்பண்புகள்
அவர்களுடன் பழகுவதையும் அவர்களுடைய உடனிருப்பில்
நேரத்தைச் செலவிடுவதையும் மிகவும் இனிமையானதாக
ஆக்குகின்றன. நாம் முழுமையாக உணராவிட்டாலும்
அவசரமானதாகவும் அதே சமயம்
வரையறுக்கப்பட்டதாகவும் தோன்றும் ஏதோ ஒன்றால் நாம்
பெரும்பாலும் உரையாடலுக்குள் தள்ளப்படுகிறோம்.
வேலையில் நாம் கலக்கமாக இருக்கிறோம்; மேலும்
இலட்சியமான தொழில் நகர்வுகளைப் பற்றி யோசித்துக்
கொண்டிருக்கிறோம்; இன்னார் நமக்குச் சரியானவரா

என்று உறுதியாகத் தெரியவில்லை; உறவுகளில் சிக்கல்கள் உள்ளன; ஏதோ ஒன்றைப் பற்றி நாம் கவலைப்படுகிறோம் அல்லது பொதுவாக வாழ்க்கையைப் பற்றிச் சற்று மனச் சோர்வாக உணர்கிறோம். சரியாக என்ன தவறு என்று நம்மால் சுட்டிக்காட்ட முடியாமல் இருக்கிறோம் அல்லது ஒருவேளை நாம் ஏதோ ஒன்றைப் பற்றி மிகவும் உற்சாகமாகவும் ஆர்வமாகவும் இருக்கிறோம்; ஆனால் நமது ஆர்வத்திற்கான காரணங்களைத் துல்லியமாகக் கண்டறிவது கடினமாக உள்ளது.

ஒரு நன்கு கேட்பவர், மற்றொருவருடன் நடைபெறும் உரையாடலின் மூலம் நாம் குழப்பமும் மனஅமைதியின்மையும் நிறைந்த நிலையிலிருந்து, அதிகக் கவனத்துடனும் அதிக மனஅமைதியுடனும் கூடிய நிலைக்கு நகர வேண்டும் என்பதை நன்கு அறிந்திருப்பார். அவர்களுடன் சேர்ந்து உண்மையில் என்ன ஆபத்து இருக்கிறது என்பதை நாம் கண்டறிவோம். ஆனால் உண்மையில் இது நடப்பதில்லை. ஏனெனில் உரையாடலுக்குள் தெளிவுபடுத்தலுக்கான விருப்பத்தையும் தேவையையும் பற்றிய போதுமான விழிப்புணர்வு இல்லை; போதுமான நல்ல கேட்பவர்களும் இல்லை. எனவே மக்கள் பகுப்பாய்வு செய்வதற்குப் பதிலாக வலியுறுத்த முனைகிறார்கள். தாங்கள் கவலையாக, உற்சாகமாக, சோகமாக அல்லது நம்பிக்கையுடன் இருப்பதாகப் பலவழிகளில் மீண்டும் கூறுகிறார்கள். மேலும் அவர்களுடன் உரையாடுபவர்கள் அதைக் கேட்கிறார்கள். ஆனால் அவை மேலும் கண்டறிய அவர்களுக்கு

Prepp
Your Personal Exams Guide

உதவுவதில்லை. நல்ல கேட்பவர்கள் பல்வேறு உரையாடல் உத்திகள் மூலம் இதை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

மற்றவர் பேசும்போது அவர்கள் அவரைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். ஊக்கமளிக்கும் சிறு ஆதரவுக் கருத்துகளைத் தெரிவிப்பார்கள். அனுதாபப் பெருமூச்சு, உற்சாகமூட்டும் தலையசைப்பு, ஆர்வத்தைக் காட்டும் தந்திரமான "ம்ம்" போன்ற மென்மையான நேர்மறையான சைகைகளைச் செய்வார்கள். எல்லா நேரமும் பிரச்சினைகளை இன்னும் ஆழமாக ஆராயும் படி மற்றவரைத் தூண்டிக் கொண்டே இருப்பார்கள். ''இதைப் பற்றி இன்னும் சொல்லுங்கள்... '', ''நீங்கள் சொன்ன போது நான் மிகவும் வியப்படைந்தேன்...'', ''அது ஏன் நடந்தது என்று நினைக்கிறீர்கள் ?'' என்று கேட்பதை அவர்கள் விரும்புவார்கள் அல்லது ''அதைப் பற்றி நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள் ?'' என்று கேட்பார்கள். நல்ல கேட்பாளர்கள் மற்றவர்களின் உரையாடல்களில் உள்ள தெளிவின்மையை உணர்வதை இயல்பாகவே ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் அதைக் கண்டிக்கவோ, அவசரப்படுத்தவோ, பொறுமையிழக்கவோ மாட்டார்கள். ஏனெனில் தெளிவின்மையை மனதின் ஓர் உலகளாவிய மற்றும் மிகவும் முக்கியமான பிரச்சினையாக அவர்கள் பார்க்கிறார்கள்; அதற்கு உதவுவது ஓர் உண்மையான நண்பரின் கடமையாகும். பெரும்பாலும் நாம் ஒரு விஷயத்தின் அருகில் இருப்போம். ஆனால் உண்மையில் நம்மைத் தொந்தரவு செய்வது அல்லது உற்சாகப்படுத்துவது எது என்பதை நம்மால் முழுமையாகக் கண்டறிய முடியாது. விரிவாகப் பேசவும் இன்னும்

ஆழமாகச் செல்லவும், மேலும் சற்றுத் தூண்டவும் கிடைக்கும் ஊக்கத்தால் நாம் பெரிதும் பயனடைகிறோம் என்பதை நல்ல கேட்பாளர்கள் அறிவார்கள். நேரடியாகப் பேசத் தொடங்குவதற்குப் பதிலாக, 'தொடருங்கள்' என்ற அந்த இரண்டு அரிதான, மந்திர வார்த்தைகளைச் சொல்லும் ஒருவர் நமக்குத் தேவை. நாம் உடன் பிறந்தவரைப் பற்றிக் குறிப்பிடும் போது, அவர்கள் அவரைப் பற்றி இன்னும் கொஞ்சம் தெரிந்து கொள்ள விரும்புவார்கள். குழந்தைப் பருவத்தில் அந்த உறவு எப்படி இருந்தது ? காலப்போக்கில் அது எப்படி மாறியுள்ளது ? நமது கவலைகளும் உற்சாகங்களும் எங்கிருந்து வருகின்றன என்பதை அறிய அவர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். அது ஏன் உங்களைக் குறிப்பாகத் தொந்தரவு செய்தது ? அது ஏன் உங்களுக்கு அவ்வளவு பெரிய விஷயமாக இருந்தது ? என்பது போன்ற கேள்விகளை அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் நமது கடந்த காலங்களை மனதில் வைத்திருக்கிறார்கள். நாம் முன்பு சொன்ன ஒரு விஷயத்தை அவர்கள் மீண்டும் குறிப்பிடக்கூடும். அதன் மூலம் அவர்கள் ஓர் ஆழமான ஈடுபாட்டின் அடித்தளத்தை உருவாக்குகிறார்கள் என்று நாம் உணர்கிறோம். தெளிவற்ற விஷயங்களைச் சொல்வது மிகவும் எளிது; ஏதோ ஒன்று அருமையாக உள்ளது அல்லது மோசமாக இருக்கிறது; நன்றாக இருக்கிறது அல்லது எரிச்சலூட்டுகிறது என்று நாம் சாதாரணமாகக் குறிப்பிடுகிறோம். ஆனால், நாம் ஏன் அப்படி உணர்கிறோம் என்பதை உண்மையில் ஆராய்வதில்லை.

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

நல்ல கேட்பாளர் நாம் முதலில் சொன்ன சிலவற்றின் மீது ஆக்கப்பூர்வமான, நட்பான சந்தேகம் மற்றும் பின்னணியில் பதுங்கியிருக்கும் ஆழமான அணுகுமுறைகளுக்குப் பிறகு இருப்பார்.

(513 சொற்கள்)

Q4. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக. ***20***

பழங்காலத்திலிருந்தே இந்திய மாலுமிகள் பாய்மரத் திறமைக்குப் பெயர் பெற்றுத் திகழ்ந்தனர். அவர்கள் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு கடலில் பயணம் செய்யத் தொடங்கினர். அக்காலத்தில், கடல் பயணத்திற்கு ஒரு சில கருவிகளே இருந்தன; இன்றைய நவீன உபகரணங்கள் கிடைக்கவில்லை. இருப்பினும், பண்டைய மாலுமிகள் ஒருவேளை கூர்மையான உணர்வுகளையும் வானிலை முறைகளைப் பற்றிய தெளிவான புரிதலையும் பெற்றிருந்திருக்கலாம். அவர்களால் கோள்களைக் கவனிக்கவும், காற்றைப் புரிந்து கொள்ளவும், நீரின் நிறத்தைக் கொண்டு கடலின் ஆழத்தைக் கண்டறியவும் முடியும். கடல் வாழ் உயிரினங்களை அவதானிப்பதன் மூலம், அவர்கள் நிலத்திற்கான தூரத்தையும், சில சமயங்களில் ஒரு நாட்டின் இருப்பிடத்தைக் கூடத் தீர்மானிக்க முடியும். அந்தக் காலத்தில் கடல்சார் கல்வியாளர்கள் இல்லை. எனவே அவர்கள் பெற்ற பயிற்சிகள் அனைத்தும் சோதனை மற்றும் பிழை அனுபவத்தின் மூலம் கற்றலாக இருந்தன. சில சமயங்களில் விபத்துகள் நடந்தாலும், அவர்களின் தைரியமும் தன்னம்பிக்கையும் அவர்களைத்

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

தொடர்ந்து ஊக்குவிக்கின்றன. இந்த வலிமையுடன் அவர்கள் மேற்கில் பாரசீக வளைகுடாவையும், ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையையும், இந்தோனேசியா, கம்போடியா அன்னெம், போர்னியோ போன்ற தொலைதூரத் தீவுகளையும் கிழக்கு மற்றும் தூரக் கிழக்கில் உள்ள செலிப்ஸ் போன்ற தொலைதூரத் தீவுகளையும் அடைய முடிந்தது. கடல்சார் நவீனயுகம் 1920களின் முற்பகுதியில் தொடங்கியது.

சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா முழுவதும் ஓர் இனிமையான மாற்ற அலை வீசுகிறது. சில நாடுகளுக்கு முன்பு இந்தியாவின் புகழ்பெற்ற மறைந்த கப்பல் பாரம்பரியத்தின் சூரியன், மீண்டும் உதயமாகிப் பிரகாசிக்கிறது.

Q5. **பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க.** *20*

Orientation for entrepreneurship has to start right from the schools. In schools, teachers need to highlight the role of entrepreneurship in national development. During college, students must be exposed to business development opportunities and must be trained towards the creation of new enterprises. Parents should encourage their children to take up new ventures after their education. We should cultivate a mindset that 'Idea is wealth'.

The government must create a facilitating environment for the provision of venture capital for innovative ideas without collateral security. Universities and engineering and management institutions should work with banks and other funding agencies towards simplifying procedures for setting up businesses and working with entrepreneurs till the project becomes self-sustaining and viable. Procedures in government should facilitate the spotting and recognition of new Indian talent in entrepreneurship by creating a level playing field for healthy competition. Citizens who can afford it should turn themselves into angel investors or start venture capital organizations to fund such new ventures. Big and small industries need to have an open mind in order to encourage and partner with young entrepreneurs.

Prepp
Your Personal Exams Guide

Q6. **(a)** **கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** *2×5=10*

(i) வெண் மணி *2*

(ii) கரும் பலகை *2*

(iii) வெள்ளி நிலா *2*

(iv) கருங்கூந்தல் *2*

(v) கருமுகில் *2*

(b) **பின்வரும் இணைச் சொற்களின் பொருள் வேறுபாடு புலப்படுமாறு ஏற்ற சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.** *2×5=10*

(i) அலை – அளை *2*

(ii) கலி – களி *2*

(iii) மனம் – மணம் *2*

(iv) கரை – கறை *2*

(v) பரி – பறி *2*

(c) **பிரித்து எழுதுக :** *1×5=5*

(i) நன்னெறி *1*

(ii) பொற்காலம் *1*

(iii) பூங்கொத்து *1*

(iv) இன்சொல் *1*

(v) அறநூல் *1*

Prepp
Your Personal Exams Guide

(d) **எதிர்ச் சொற்கள் தருக :** *1×5=5*

(i) அன்பு *1*

(ii) ஒளி *1*

(iii) வளம் *1*

(iv) துணிவு *1*

(v) தண்மை *1*

(e) **எதிர்மறை வாக்கியமாக மாற்றுக :** *1×5=5*

(i) முருகன் எப்போதும் படித்துக் கொண்டே இருந்தான். *1*

(ii) தஞ்சையில் நெற்பயிர்கள் செழித்து வளர்ந்தன. *1*

(iii) ஒருவனே தேவன். *1*

(iv) தமிழர்கள் கலைகளை வளர்த்தனர். *1*

(v) ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றினர். *1*

(f) **பிழை நீக்கி எழுதுக :** *1×5=5*

(i) காவிரிப் படுகையில் நன்செய் நிலங்கள் இருந்தது. *1*

(ii) மாமல்லபுரச் சிற்பங்கள் நுட்பமானவை. *1*

(iii) நேற்று இடி மின்னலுடன் மலை பெய்தது. *1*

(iv) கலங்கரை விளக்கம் கடற்கரையில் உள்ளது. *1*

(v) பொதுமக்களின் ஒத்துழைப்புத் தேவை. *1*